**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஆனி மாதம் 12 ம் நாள்

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26-ம் நாள் வியாழக்கிழமை

**இடைக்கால மனு எண்.8/2024**

**in**

**அசல் வழக்கு எண். 85/2023**

N.சிவக்குமார் **...மனுதாரர் / 14 ம் பிரதிவாதி**

//எதிர்//

S.பூங்கொடி **...எதிர்மனுதாரர்/வாதி**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S. முருகராஜ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.முரளிதரன் மற்றும் திரு.S.கண்ணன், ஆகியவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து (Reject the Plaint) உத்தரவிட வேண்டி மனுதாரர் / 14 ம் பிரதிவாதியால் கட்டளை 7 விதி 11 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). மனுதாரர் வழக்கில் 14 ம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்/ வாதி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல்

செய்துள்ளார். சூலூர் வட்டம், சூலூர் கிராமம் க.ச.எண்.348 நெ.காலையில் உள்ள 1.96 ஏக்கர் பூமியும், க.ச.எண்.379 நெ.காலையில் உள்ள 0.86 ¾ ஏக்கர் பூமியும் மற்றும் காலை எண்கள் குறிப்பிடாத வீடுகள் ஆகியவை லேட் ரங்கப்பண்ணாடி என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும். மேற்படி லேட் ரங்கப்பண்ணாடிக்கு 3 மகன்கள், 3 மகள்கள் வாரிசுதாரர்கள். இதில் மேற்படி எதிர்மனுதாரர்/ வாதியானவர் லேட் ரங்கப்பண்ணாடி மகன் R.சுப்பிரமணியன் மனைவியாவார். க.ச.எண்.348 மற்றும் 379 நெ காலை பூமியும் மற்றும் லேட் ரங்கப்பண்ணாடிக்கு பாத்தியப்பட்ட பூமிகளில் தனக்குண்டான பாகத்தினை கோரி திரு.லேட் ரங்கப்பண்ணாடியின் முதலாவது மகன் லேட் ராயப்பன் மாண்புமிகு திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.208/1981 என்ற வழக்கினை தனது தாய் கருப்பாத்தாள் மற்றும் உடன் பிறந்தவர்களான 1. பழனிசாமி, 2. சுப்ரமணியம், 3. ராயத்தாள், 4. மாரியாய், 5. ராமாத்தாள் ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்து அவ்வழக்கில் நீதிமன்றம் லேட் ராயப்பனுக்கு சாதகமாக தாவா சொத்தினை 28 பாகமாக பிரித்து அதில் லேட் ராயப்பனுக்கு 8 பாகத்தினை ஒதுக்கி கடந்த 22.01.1983 ம் தேதி தீர்ப்பு வழங்கியது.

1.2). மேற்படி தீர்பினை எதிர்த்து அசல் வழக்கு எண்.208/1981 ல் 1, 2 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து மனு எண்.508/1983 னை விசாரணை செய்த மாண்புமிகு உயர்நீதிமன்றம் கடந்த 05.01.1991 ம் தேதி மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்து லேட் ராயப்பனுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியது. ராயப்பன் கடந்த 14.08.1997 ம் தேதி காலமாகிவிட்டார். பின்னிட்டு R.சுப்பிரமணியத்தின் மனைவியான எதிர்மனுதாரர்/ வாதி மேற்படி ராயப்பன் வாரிசுகள் மீது பல்லடம் மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.242/2009 தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி இடைக்கால மனு எண்.I.A.No.825/2009 தாக்கல் செய்து அந்த மனுவினை விசாரனை செய்த நீதிமன்றம் மேற்படி மனுவினை கடந்த 10.03.2010 ம் தேதி மாண்புமிகு திருப்பூர் சார்பு

நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.208/1981 ன் படி லேட் ராயப்பனுக்கு க.ச.எண்.348 நெ காலையில் 8/28 பங்கு பூமி (0.56 சென்ட்) பாத்தியப்பட்டது என்ற தீர்ப்பினை உறுதி செய்து மேற்படி மனுவினை தள்ளுபடி செய்தது.

1.3). அசல் வழக்கு எண்.208/1981 ன் படி லேட் ராயப்பனுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.348 நெ காலையில் 8/28 பங்கு பூமி (0.56 சென்ட்) சொத்தினை கடந்த 13.11.2008 ம் தேதி மனுதாரர்/ 14 ம் பிரதிவாதி மற்றும் 15 ம் பிரதிவாதியான ஷபீர் அகமத் ஆகியோர்கள் லேட் ராயப்பனின் வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றனர். மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு 0.56 சென்ட் பூமியை க.ச.எண்.348/3 மனுதாரர்/ 14 ம் பிரதிவாதிக்கும் க.ச.எண்.348/3B 15 ம் பிரதிவாதி ஷபீர் அகமத்கும் என உட்பிரிவு செய்துள்ளார்கள். கடந்த 03.06.2010 ம் தேதி மேற்படி 13.11.2008 ம் தேதிய கிரைய பத்திரத்தினை பொருத்து 15 ம் பிரதிவாதி இந்த மனுதாரர்/ 14 ம் பிரதிவாதிக்கு ஜெனரல் பவர் பத்திரம் மூலம் 0.56 சென்ட் பூமியை எழுதி கொடுத்துவிட்டார். இந்த மனுதாரர்/ 14 ம் பிரதிவாதிக்கு சொந்தமான பூமியை எதிர்மனுதாரர்/ வாதி சட்டத்திற்கு புறம்பாக அபகரிக்கும் நோக்கத்துடன் அடிக்கடி இடையூறு செய்து வந்ததால் மனுதாரர்/ 14 ம் பிரதிவாதியும் மற்றும் அசல் வழக்கில் 15 ம் பிரதிவாதியும் சேர்ந்து மாண்புமிகு கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.547/2010 என்ற வழக்கினை தாக்கல் செய்து அவ்வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி I.A.No.1530/2010 என்ற இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி எதிர்மனுதாரர்/ வாதி மற்றும் அவரது கணவர் சுப்பிரமணியத்திற்கு எதிராக மேற்படி இடைக்கால மனு அனுமதிக்கப்பட்டு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

1.4). பின்னிட்டு மேற்படி எதிர்மனுதாரர்/வாதி கோயமுத்தூர், வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் பட்டா மாறுதலை நீக்ககோரி மனுதாக்கல் செய்தார். அதற்கு மனுதாரர்/ 14 ம் பிரதிவாதி கடந்த 14.08.2014 ம் தேதி விளக்கம் அளித்தார். அந்த

விளக்கத்தின் அடிப்படையில் கோயமுத்தூர், வருவாய் கோட்டாட்சியர் நி.மு.எண்.3756/13/ஆ 2 மூலம் உத்திரவு கொடுத்துள்ளார்.

1.5). பின்னிட்டு மேற்படி எதிர்மனுதாரர்/வாதியான திருமதி.பூங்கொடி கோவை மாவட்ட குற்றப்பிரிவு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் மேற்படி மனுதாரர்/ 14 ம் பிரதிவாதி மீது நிலம் மோசடி செய்ததாக புகார் மனு அளித்தார். மேற்படி எதிர்மனுதாரர்/ வாதி, மனுதாரர்/ 14 ம் பிரதிவாதி மீது அளித்த புகாரினை 11.08.2010 ம் தேதி விசாரணை செய்தார்கள், மேற்படி மனுதாரர்/ 14 ம் பிரதிவாதியின் ஆவணங்களை காவல் துறையினரிடம் அளித்துவிட்டார். மேற்படி விசாரணையில் மேற்படி எதிர்மனுதாரர்/வாதியான திருமதி.பூங்கொடி எந்த ஒரு ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. பின்னிட்டு காவல் துறையினர் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.208/1981 ன் படி லேட்.ராயப்பனுக்கு க.ச.எண்.348 நெ.காலையில் 8/28 பங்கு பூமி (0.56 சென்ட்) பாத்தியப்பட்டது போக மீதமுள்ள இடத்திற்கு எந்த இடையூறும் செய்ய மாட்டோம் என மனுதாரர்/ 14 ம் பிரதிவாதி காவல் துறையினரிடம் எழுதி கொடுத்துவிட்டார். பின்னிட்டு 03.11.2008 ம் தேதி பல்லடம் துணை கண்காணிப்பாளர் அவர்களின் தலைமையில் விசாரணை மேற்கொண்டதில் எதிர்மனுதாரர்/ வாதியின் கணவர் சுப்பிரமணியம் சட்ட ஒழுங்கு பிரச்சினையில் ஈடு படக்கூடாது என்றும், கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.547/2010 வழக்கு முடியும்வரை யாரும் இடையூறு செய்யக்கூடாது என்று காவல் துறையினர் எழுதி வாங்கியதில், தாவா சூலூர் வட்டம், சூலூர் கிராமம் க.ச.எண்.348 நெ.காலையில் உள்ள 1.96 ஏக்கல் பூமியும், க.ச.எண்.379 நெ.காலையில் உள்ள 0.86 ¾ ஏக்கர் பூமியில் அனுபவத்தில் உள்ளவர்கள் கையொப்பமிட்டார்கள் மேற்படி எதிர்மனுதாரர்/ வாதியின் கணவர் திரு.சுப்பிரமணியம் கையெழுத்திட மறுத்துவிட்டார்.

1.6). மனுதாரர்/ 14 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.348/3B பு.ஏ.0.56 சென்ட் பூமியினை வீட்டுமனைகளாக பிரித்து கடந்த 18.06.2010 ம் தேதி அசல் வழக்கில் 18 ம் பிரதிவாதியான திரு.வேல்ராஜ் என்பவருக்கு 1518 சதுரடி பூமி கிரையம்

கொடுத்துவிட்டார். பின்னிட்டு கடந்த 22.09.2010 ம் தேதி அசல் வழக்கில் 16 ம் பிரதிவாதியான திரு.சபரிதாஸ் என்பவருக்கு 2070 சதுரடி பூமி கிரையம் கொடுத்துவிட்டார். பின்னிட்டு கடந்த 18.10.2010 ம் தேதி அசல் வழக்கில் 17 ம் பிரதிவாதியான திரு.சிவசங்கரன் என்பவருக்கு 1320 சதுரடி பூமி கிரையம் மீண்டும் அதே தேதியில் மேற்படி 17 ம் பிரதிவாதிக்கு 1320 சதுரடி பூமி கிரையம் கொடுத்துவிட்டார்.

1.7). கடந்த 20.10.2010 ம் தேதி அசல் வழக்கில் 18 ம் பிரதிவாதியான வேல்ராஜ் என்பவருக்கு 1318 சதுரடி பூமியும் அதே தேதியில் மீண்டும் வேல்ராஜ்க்கு 1485 சதுரடி, 1547 சதுரடி, 1304 சதுரடி மற்றும் 900 சதுரடி பூமிகளையும், அசல் வழக்கில் 19 ம் பிரதிவாதியான N.T. மூர்த்தி என்பவருக்கு 1320 சதுரடி, 1400 சதுரடி பூமிகளையும் அசல் வழக்கில் 20 ம் பிரதிவாதியான கலியபெருமாள் என்பவருக்கு 1320 சதுரடி பூமியையும், கடந்த 15.06.2011 ம் தேதி அசல் வழக்கில் 18 ம் பிரதிவாதியான வேல்ராஜ்க்கு 1448 சதுரடி பூமி கிரையம் கொடுத்துவிட்டார்.

1.8). பின்னிட்டு 12.01.2022 ம் தேதி அசல் வழக்கில் 20 ம் பிரதிவாதியான கலியபெருமாள் 1320 சதுரடி பூமியை கௌரி என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டார். அதே தேதியில் அசல் வழக்கில் 18 ம் பிரதிவாதியான வேல்ராஜ் 1485 சதுரடி, 1547 சதுரடி, 1304 சதுரடி, 1318 சதுரடி, 1485 சதுரடி, 1518 சதுரடி, 1448 சதுரடி பூமிகளையும், கௌரி, 18-ம் பிரதிவாதி வேல்ராஜ்-இடம் கிரையம் பெறுகிறார். அதே தேதியில், 19 ம் பிரதிவாதியான N.T.மூர்த்தி 1400 சதுரடி பூமியையும் ஒரே தேதியில் கௌரிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள். மேற்படி கௌரி கடந்த 31.08.2023 ம் தேதி 1485 சதுரடி பூமியை செல்வராஜ் என்பவருக்கும், 08.09.2023 ம் தேதி 875 சதுரடி பூமியை ராம்மூர்த்தி மற்றும் நர்மதா ஆகியோர்களுக்கும், 08.09.2023 ம் தேதி 867 சதுரடி பூமியை சுந்தரராஜ் மற்றும் வேதவல்லி ஆகியோர்களுக்கும், 01.12.2023 ம் தேதி 872 சதுரடி, 1072 சதுரடி பூமிகளை விஸ்ணுராமன் மற்றும் தேவி

ஆகியோருக்கும் கிரையம் கொடுத்துவிட்டார்.

1.9). பின்னிட்டு கடந்த 07.12.2023 ம் தேதி கலியபெருமாள் பொது அதிகாரம் பெற்றவர் என்ற நிலையில் சபரீஸ் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார். மேற்படி வழக்கு மதிப்பீடு குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டடும், வழக்கு மூலமின்றியும், அவசிய தரப்பினர்களை சேர்க்காமலும் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதி ஏற்கனவே வழக்கு மூலம் தீர்பு காணப்பட்டு அந்த விவரத்தினை மறைத்து மேற்படி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு காலதாமதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

<u>2). எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். வழக்கு சொத்து ஆதியில் ரங்கப்பண்ணாடியின் தனிப்பட்ட சொத்தாகும். 10.01.1962 ம் தேதி ரங்கப்பண்ணாடி அவரது மனைவி கருப்பாத்தாளுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்தார். அதன்பின்னிட்டு ரங்கப்பண்ணாடி 13.03.1962 ம் தேதி இறந்துவிட்டார். 13.02.1979 ம் தேதி கருப்பாத்தாள், நஞ்சம்மாள் என்பவருக்கு வழக்கு சொத்தை பொருத்து பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்தார். நஞ்சம்மாள் வாதியின் மீது கொண்ட பாசத்தால் 23.05.1981 ல் ஆவண எண்.714/1981 ல் தானசெட்டில்மென்ட் வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்தார். அதன்படி வாதி தாவா சொத்தின் முழுமையான உரிமையாளர் ஆவார்.

2.2). அதன்பின்னிட்டு வாதி சூலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.605/2017 என இந்த வழக்கின்

1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் ஒரு மாசானன் என்கின்ற காடுகுத்தி அவர்கள் மீது தாக்கல் செய்தார். மேற்படி மாசானன் என்கிற காடுகுத்தி இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகள் 8 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டனர். ஒரு சின்னமணி என்கிற மாசானி என்பவர் இறந்த பின்னிட்டு 11 முதல் 13 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டனர். அதில் கடந்த 12.08.2022 ல் வாதிக்கு ஆதரவாக மேற்படி வழக்கு தீர்ப்பானது. ராயப்பன் என்பவர் மாண்புமிகு திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் பாகபிரிவினை கோரி அசல் வழக்கு எண்.208/1981 என்ற வழக்கை அவரது சகோதரர்களான 1.பழனிசாமி, 2.சுப்ரமணியம், 3.ராயத்தாள், 3.மாரியாய், 4.ராமாத்தாள், 6.கருப்பாத்தாள் பெயரில் தாக்கல் செய்ததில் 28 சமபாகங்களாக பிரித்து ராயப்பனுக்கு 8 பாகம் உள்ளது என தீர்ப்பாகி உள்ளது என்பது தவறு.

2.3). கருப்பாத்தாள் 13.02.1979 ம் தேதியில் நஞ்சம்மாள் என்பவருக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்தார். பின்னிட்டு 23.05.1981 ம் தேதியில் நஞ்சம்மாள் செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டதால் அந்த பாகபிரிவினை வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. சொத்தின் உரிமையாளரான நஞ்சம்மாளை சேர்க்காததால் மேற்படி வழக்கு நஞ்சம்மாளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல. மனுதாரர் எதிர்மனுதாரர்/வாதியின் கணவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.547/2010 யை மாண்புமிகு கோயம்புத்தூர் இரண்டாவது கூடுதல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். எதிர்மனுதாரர் அந்த வழக்கில் தரப்பினர் இல்லை. மேற்படி வழக்கு 04.06.2012 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. 14.08.2014 ம் தேதியிட்ட DRO உத்தரவு சட்டப்படி மனுவை தள்ளுபடி செய்தது. எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார். மனுதாரர் மற்றும் ராயப்பனின் வாரிசுகளுக்க எவ்வித உரிமை மூலமோ இல்லாமல் மோசடியாக கூட்டு சேர்ந்து கிரையப் பத்திரம் ஏற்படுத்தியுள்ளனர். அசல் வழக்கில் இரு தரப்பிலும் தாக்கல் செய்யும் வாய்மொழி சாட்சியம் மூலமாகவும், ஆவணங்கள் மூலமாகவும்தான் மேற்படி வழக்கில் உள்ள சட்டப் பிரச்சினை மற்றும் உரிமை பிரச்சினை குறித்து தீர்வு

காணமுடியும். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3.** இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

**6.** மனுதாரர் தரப்பில் சூலூர் கிராமம் க.ச.எண்.348 நெ.காலையில் உள்ள 1.96 ஏக்கர் பூமியும், க.ச.எண்.379 நெ.காலையில் உள்ள 0.86 ¾ ஏக்கர் பூமியும் மற்றும் காலை எண்கள் குறிப்பிடாத வீடுகள் ஆகியவை லேட் ரங்கப்பண்ணாடி என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். க.ச.எண்.348 மற்றும் 379 நெ காலை பூமியும் மற்றும் லேட் ரங்கப்பண்ணாடிக்கு பாத்தியப்பட்ட பூமிகளில் தனக்குண்டான பாகத்தினை கோரி திரு.லேட் ரங்கப்பண்ணாடியின் முதலாவது மகன் லேட் ராயப்பன் மாண்புமிகு திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.208/1981 என்ற வழக்கினை பாகப்பிரிவினை கோரி தாவா தாக்கல் செய்ததில் தாவா சொத்தினை 28 பாகமாக பிரித்து அதில் லேட் ராயப்பனுக்கு 8 பாகத்தினை ஒதுக்கி கடந்த 22.01.1983 ம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்பினை எதிர்த்து அசல் வழக்கு எண்.208/1981 ல் 1, 2 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு மனு எண்.508/1983 னை விசாரணை செய்த மாண்புமிகு உயர்நீதிமன்றம் கடந்த 05.01.1991 ம் தேதி மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்து லேட் ராயப்பனுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியது.

6.1). ராயப்பன் கடந்த 14.08.1997 ம் தேதி காலமாகிவிட்டார். பின்னிட்டு R.சுப்பிரமணியத்தின் மனைவியான எதிர்மனுதாரர்/ வாதி ராயப்பன் வாரிசுகள் மீது

பல்லடம் மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.242/2009 தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி இடைக்கால மனு எண்.I.A.No.825/2009 தாக்கல் செய்யப்பட்டு மனுவினை விசாரனை செய்த நீதிமன்றம் கடந்த 10.03.2010 ம் தேதி மாண்புமிகு திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.208/1981 ன் படி லேட் ராயப்பனுக்கு க.ச.எண்.348 நெ காலையில் 8/28 பங்கு பூமி (0.56 சென்ட்) பாத்தியப்பட்டது என்ற தீர்ப்பினை உறுதி செய்து மேற்படி மனுவினை தள்ளுபடி செய்தது.

6.2). லேட் ராயப்பனுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.348 நெ காலையில் 8/28 பங்கு பூமி (0.56 சென்ட்) சொத்தினை கடந்த 13.11.2008 ம் தேதி மனுதாரர்/14 ம் பிரதிவாதி மற்றும் 15 ம் பிரதிவாதியான ஷபீர் அகமத் ஆகியோர்கள் லேட் ராயப்பனின் வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றனர். கிரையத்திற்கு பின்னிட்டு 0.56 சென்ட் பூமியை க.ச.எண்.348/3 மனுதாரர்/14 ம் பிரதிவாதிக்கும் க.ச.எண்.348/3B 15 ம் பிரதிவாதி ஷபீர் அகமத்கும் என உட்பிரிவு செய்துள்ளார்கள். கடந்த 03.06.2010 ம் தேதி மேற்படி 13.11.2008 ம் தேதிய கிரைய பத்திரத்தினை பொருத்து 15 ம் பிரதிவாதி இந்த மனுதாரர்/ 14 ம் பிரதிவாதிக்கு ஜெனரல் பவர் பத்திரம் மூலம் 0.56 சென்ட் பூமியை எழுதி கொடுத்துவிட்டார். இந்த மனுதாரர்/14 ம் பிரதிவாதிக்கு சொந்தமான பூமியை எதிர்மனுதாரர்/வாதி சட்டத்திற்கு புறம்பாக அபகரிக்கும் நோக்கத்துடன் அடிக்கடி இடையூறு செய்து வந்ததால் மனுதாரர்/14 ம் பிரதிவாதியும் மற்றும் அசல் வழக்கில் 15 ம் பிரதிவாதியும் சேர்ந்து மாண்புமிகு கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.547/2010 என்ற வழக்கினை தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி I.A.No.1530/2010 என்ற இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்/வாதி மற்றும் அவரது கணவர் சுப்பிரமணியத்திற்கு எதிராக இடைக்கால மனு அனுமதிக்கப்பட்டது.

6.3). மனுதாரர்/14 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.348/3B பு.ஏ.0.56 சென்ட் பூமியினை வீட்டுமனைகளாக பிரித்து கடந்த 18.06.2010 ம் தேதி அசல் வழக்கில் 18 ம் பிரதிவாதியான திரு.வேல்ராஜ் என்பவருக்கு 1518 சதுரடி பூமி கிரையம் கொடுத்துவிட்டார். கடந்த 22.09.2010 ம் தேதி அசல் வழக்கில் 16 ம் பிரதிவாதியான திரு.சபரிதாஸ் என்பவருக்கு 2070 சதுரடி பூமி கிரையம் கொடுத்துவிட்டார். கடந்த 18.10.2010 ம் தேதி அசல் வழக்கில் 17 ம் பிரதிவாதியான திரு.சிவசங்கரன் என்பவருக்கு 1320 சதுரடி பூமி கிரையம் மீண்டும் அதே தேதியில் மேற்படி 17 ம் பிரதிவாதிக்கு 1320 சதுரடி பூமி கிரையம் கொடுத்துவிட்டார். கடந்த 20.10.2010 ம் தேதி அசல் வழக்கில் 18 ம் பிரதிவாதியான வேல்ராஜ் என்பவருக்கு 1318 சதுரடி பூமியும் அதே தேதியில் மீண்டும் வேல்ராஜ்க்கு 1485 சதுரடி, 1304 சதுரடி மற்றும் 900 சதுரடி பூமிகளையும், அசல் வழக்கில் 19 ம் பிரதிவாதியான N.T.மூர்த்தி என்பவருக்கு 1320 சதுரடி, 1400 சதுரடி பூமிகளையும் அசல் வழக்கில் 20 ம் பிரதிவாதியான கலியபெருமாள் என்பவருக்கு 1320 சதுரடி பூமியையும் கிரையம் கொடுத்துவிட்டார். பின்னிட்டு கடந்த 15.06.2011 ம் தேதி அசல் வழக்கில் 18 ம் பிரதிவாதியான வேல்ராஜ்க்கு 1448 சதுரடி பூமி கிரையம் கொடுத்துவிட்டார்.

6.4). பின்னிட்டு 12.01.2022 ம் தேதி அசல் வழக்கில் 20 ம் பிரதிவாதியான கலியபெருமாள் 1320 சதுரடி பூமியை கௌரி என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டார். அதே தேதியில் அசல் வழக்கில் 18 ம் பிரதிவாதியான வேல்ராஜ் 1485 சதுரடி, 1547 சதுரடி, 1304 சதுரடி, 1318 சதுரடி, 1485 சதுரடி, 1518 சதுரடி, 1448 சதுரடி பூமிகளையும், 19 ம் பிரதிவாதியான N.T.மூர்த்தி 1400 சதுரடி பூமியையும் ஒரே தேதியில் கௌரிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள். மேற்படி கௌரி கடந்த 31.08.2023 ம் தேதி 1485 சதுரடி பூமியை செல்வராஜ் என்பவருக்கும், 08.09.2023 ம் தேதி 875 சதுரடி பூமியை ராம்மூர்த்தி மற்றும் நர்மதா ஆகியோர்களுக்கும், 08.09.2023 ம் தேதி 867 சதுரடி பூமியை சுந்தரராஜ் மற்றும் வேதவல்லி ஆகியோர்களுக்கும், 01.12.2023 ம் தேதி 872 சதுரடி, 1072 சதுரடி பூமிகளை விஸ்ணுராமன் மற்றும் தேவி

ஆகியோருக்கும் கிரையம் கொடுத்துவிட்டார்.

6.5). பின்னிட்டு கடந்த 07.12.2023 ம் தேதி கலியபெருமாள் பொது அதிகாரம் பெற்றவர் என்ற நிலையில் சபரீஸ் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார். அவசிய தரப்பினர்களை சேர்க்காமல் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு காலதாமதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என வாதிடப்பட்டது.

6.6). எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கு சொத்து ஆதியில் ரங்கப்பண்ணாடியின் தனிப்பட்ட சொத்தாகும். 10.01.1962 ம் தேதி ரங்கப்பண்ணாடி அவரது மனைவி கருப்பாத்தாளுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்த பின்னிட்டு ரங்கப்பண்ணாடி 13.03.1962 ம் தேதி இறந்துவிட்டார். 13.02.1979 ம் தேதி கருப்பாத்தாள் நஞ்சம்மாளுக்கு வழக்கு சொத்தை பொருத்து கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்தார். நஞ்சம்மாள் வாதியின் மீது கொண்ட பாசத்தால் 23.05.1981 ல் ஆவண எண்.714/1981 ல் தானசெட்டில்மென்ட் வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்தார்.

6.7). அதன்பின்னிட்டு வாதி சூலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.605/2017 என இந்த வழக்கின் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் ஒரு மாசானன் என்கின்ற காடுகுத்தி அவர்கள் மீது தாக்கல் செய்தார். மேற்படி மாசானன் என்கிற காடுகுத்தி இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகள் 8 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டனர். ஒரு சின்னமணி என்கிற மாசானி என்பவர் இறந்த பின்னிட்டு 11 முதல் 13 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டனர். அதில் கடந்த 12.08.2022 ல் வாதிக்கு ஆதரவாக மேற்படி வழக்கு தீர்ப்பானது.

6.8). கருப்பாத்தாள் 13.02.1979 ம் தேதியில் நஞ்சம்மாள் என்பவருக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்தார். பின்னிட்டு 23.05.1981 ம் தேதியில் நஞ்சம்மாள் செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டதால் அந்த பாகபிரிவினை

வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. சொத்தின் உரிமையாளரான நஞ்சம்மாளை சேர்க்காததால் மேற்படி வழக்கு நஞ்சம்மாளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல. மனுதாரர் எதிர்மனுதாரர்/வாதியின் கணவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.547/2010 யை மாண்புமிகு கோயம்புத்தூர் இரண்டாவது கூடுதல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். எதிர்மனுதாரர் அந்த வழக்கில் தரப்பினர் இல்லை. மேற்படி வழக்கு 04.06.2012 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே வழக்கு பரிகாரமானது அசல் வழக்கு விசாரணையின் போது இரு தரப்பிலும் தாக்கல் செய்யும் வாய்மொழி சாட்சியம் மூலமாகவும், ஆவணங்கள் மூலுமாகவும்தான் மேற்படி வழக்கில் உள்ள பிரச்சினை சட்டமும் பொருண்மையும் கலந்த பிரச்சினை குறித்து தீர்வு காணமுடியும் என எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

6.9). இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகளையும், ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலிக்கிறது. அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வழக்கில் சொல்லியுள்ள 14 ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியும், 14 முதல் 21 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள 'பி' அட்டவணை சொத்தை காலி செய்து, காலி இடத்தை வாதிக்கு ஒப்படைக்க வேண்டும் எனவும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 'பி' அட்டவணை சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, அவர்களது முகவர்களோ இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரமும், 'ஏ' அட்டவணை சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, அவர்களது முகவர்களோ, அவர்களது உறவினர்களோ இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.10). அசல் வழக்கு பிரச்சினையானது சட்டமும், பொருண்மையும் கலந்த பிரச்சினையாகும். இதில் இருதரப்பிலும் முன்னிறுத்தப்படும் சாட்சி மற்றும்

ஆவணங்களை பரிசீலனை செய்துதான் இந்த வழக்கில் தீர்வு காணமுடியும். மனுதாரர் தரப்பில் மேற்கண்டவாறு ராயப்பன் மாண்புமிகு திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.208/1981 என்ற வழக்கினை தனது தாய் கருப்பாத்தாள் மற்றும் உடன் பிறந்தவர்களான 1. பழனிசாமி, 2. சுப்ரமணியம், 3. ராயத்தாள், 4. மாரியாய், 5. ராமாத்தாள் ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்து அவ்வழக்கில் நீதிமன்றம் லேட் ராயப்பனுக்கு சாதகமாக தாவா சொத்தினை 28 பாகமாக பிரித்து அதில் லேட் ராயப்பனுக்கு 8 பாகத்தினை ஒதுக்கி கடந்த 22.01.1983 ம் தேதி தீர்ப்பு வழங்கியது என சொல்லியிருந்த போதிலும், மேற்படி வழக்கின் தீர்ப்புரை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

6.11). மேற்படி தீர்பினை எதிர்த்து அசல் வழக்கு எண்.208/1981 ல் 1, 2 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து மனு எண்.508/1983 னை விசாரணை செய்த மாண்புமிகு உயர்நீதிமன்றம் கடந்த 05.01.1991 ம் தேதி மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்து லேட் ராயப்பனுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியது என சொல்லியிருந்த போதிலும், மேற்படி வழக்கின் தீர்ப்புரை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

6.12). வாதி ராயப்பன் வாரிசுகள் மீது பல்லடம் மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.242/2009 தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி இடைக்கால மனு எண்.I.A.No.825/2009 தாக்கல் செய்யப்பட்டு மனுவினை விசாரனை செய்த நீதிமன்றம் கடந்த 10.03.2010 ம் தேதி மாண்புமிகு திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.208/1981 ன் படி லேட் ராயப்பனுக்கு க.ச.எண்.348 நெ காலையில் 8/28 பங்கு பூமி (0.56 சென்ட்) பாத்தியப்பட்டது என்ற தீர்ப்பினை உறுதி செய்து மேற்படி மனுவினை தள்ளுபடி செய்தது என சொல்லியிருந்த போதிலும், மேற்படி வழக்கின் தீர்ப்புரை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

மனுவில் சொல்லப்பட்டவாறு பல்வேறு கிரையங்கள் ஏற்பட்டதாக சொல்லியிருந்தபோதிலும், அதற்கான ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

6.13). எதிர்மனுதாரர் தரப்பில் 10.01.1962 ம் தேதி ரங்கப்பண்ணாடி அவரது மனைவி கருப்பாத்தாளுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்தார் என சொல்லிருந்தபோதிலும் மேற்படி உயில் ஆவணம் இந்த மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை. ரங்கப்பண்ணாடி 13.03.1962 ம் தேதி இறந்துவிட்டார். 13.02.1979 ம் தேதி கருப்பாத்தாள், நஞ்சம்மாள் என்பவருக்கு வழக்கு சொத்தை பொருத்து பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என சொல்லியுள்ள நிலையில் மேற்படி கிரையப் பத்திரம் இந்த மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை. நஞ்சம்மாள் வாதியின் மீது கொண்ட பாசத்தால் 23.05.1981 ல் ஆவண எண்.714/1981 ல் தானசெட்டில்மென்ட் வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்தார். அதன்படி வாதி தாவா சொத்தின் முழுமையான உரிமையாளர் ஆவார் என சொல்லியுள்ள நிலையில் மேற்படி தானசெட்டில்மென்ட் ஆவணம் இந்த மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை.

6.14). வாதி சூலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.605/2017 என இந்த வழக்கின் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் ஒரு மாசானன் என்கின்ற காடுகுத்தி அவர்கள் மீது தாக்கல் செய்ததில் கடந்த 12.08.2022 ல் வாதிக்கு ஆதரவாக மேற்படி வழக்கு தீர்ப்பானது என சொல்லியுள்ள நிலையில் மேற்படி வழக்கின் தீர்ப்பானது இந்த மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை.

6.15). கருப்பாத்தாள் 13.02.1979 ம் தேதியில் நஞ்சம்மாள் என்பவருக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்ததன் பேரில் 23.05.1981 ம் தேதியில் நஞ்சம்மாள் செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டதால் அந்த பாகபிரிவினை

வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என சொல்லியிருந்த போதிலும் வாதி தரப்பில் அதை ஆவணங்கள் மூலமாக நிருபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. நஞ்சம்மாள் சொத்தின் உரிமையாளர் என சொல்லியுள்ள நிலையில் அதை ஆவணங்கள் மூலமாக நிருபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே இவ்வாறான நிலையில் வழக்கு பிரச்சினையானது சட்டமும், பொருண்மையும் கலந்த நிலையில் உள்ளது. அது குறித்து அசல் வழக்கில் இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை விசாரிக்கும் போதுதான் தீர்வு காணமுடியும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025ம் ஆண்டு ஜுன் திங்கள் 26ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>** இல்லை

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.8/2024 in
OS.85/2023 in
Dated: 26.06.2025
DMC, Sulur.